**எனது இலக்கம்** - SG/ Admin/ cs/ 03

**தாபனப் பிரிவு**

2021.06.15

| மொழிபெயர்த்தவர்:<br>திருமதி எம்.எஸ்.பி ஷர்மிளா |
|---|

சகல மேலதிக நில அளவையாளர் நாயகங்கள்,

சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகங்கள்,

பணிப்பாளர் (நிதி)/ பணிப்பாளர் (அ.வ.தா)

மாகாண நில அளவையாளர் நாயகங்கள்,

பிரதி நில அளவையாளர் நாயகங்கள்,

சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்கள்/ நில அளவை அத்தியட்சகர்கள்,

சகல நில அளவையாளர்கள் மற்றும் பயிற்சி பெறும் நில அளவையாளர்கள்,

உட்பட சகல உத்தியோகத்தர்கள்

**கொவிட் 19 தொற்றுக் காலத்தில் மாதாந்த பணி இலக்குகளை வழங்குவது தொடர்பாக.**

ஆற்றுப்படுத்தப்பட்ட விடயத்திற்கு உரியதாக எனக்கும் பிரதியுடன் செயலாளர், அரச நில அளவையாளர்கள் சங்கத்திற்கு எழுதப்பட்டுள்ள காணி அமைச்சின் செயலாளரின் இலக்கம் 2/3/03/06 மற்றும் 2021.06.15 ஆம் திகதிக்குரிய கடிதத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். (உரிய கடிதத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது) அதற்கமைய, அரச தலைமையில் அபிவிருத்திச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மற்றும் தடைகள் இன்றி நடாத்திச் செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் அறிவித்துக் கொள்கிறேன்.

டப்.டீ.எம்.எஸ்.பீ. தென்னகோன்

நில அளவையாளர் நாயகம்.

**காணி அமைச்சு**

“மிஹிகத்த மெதுர”

காணிச் செயலகம்,

1200/6, இராஜமல்வத்தை வீதி,

பத்தரமுல்லை

**எனது இலக்கம்**:- 2/3/03/06

**திகதி**:- 2021.06.15

செயலாளர்,
அரச நில அளவையாளர்கள் சங்கம்

**<u>கொவிட் 19 தொற்றுக் காலத்தில் மாதாந்த பணி இலக்குகளை வழங்குவது தொடர்பாக.</u>**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக உமது சங்கத்தால் கௌரவ காணி அமைச்சர், நில அளவையாளர் நாயகம் மற்றும் எனக்கு அனுப்பப்பட்ட உமது இலக்கம் 2021/13-10 மற்றும் 2021.06.13 ஆம் திகதிக்குரிய கடிதத்துடன் தொடர்புடையது.

02. உமது இலக்கம் 2021/13-10 மற்றும் 2021.03.03 ஆம் திகதிக்குரிய கடிதம் மூலம் நில அளவையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட மாதாந்த வேலை இலக்குகள் தொடர்புடைய திருத்தியமைக்கப்பட்ட சுற்றறிக்கையை இரத்துச் செய்யுமாறு கோரப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக எனது இலக்கம் 2/3/03/06 மற்றும் 2021.03.17 ஆம் திகதிக்குரிய கடிதம் மூலம் அச்சுற்றறிக்கையானது தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டது.

03. உமது சங்கத்தின் பிரதான கோரிக்கையாக இருந்த அச்சுற்றறிக்கையை இடைநிறுத்தம் செய்ததன் பின்பும் தொடர்ந்தும் மென்மேலும் கோரிக்கைகளை முன்வைத்து தொழில்சார் நடவடிக்கைகள் எனக் கூறி தமது கடமைகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு செயற்பட்டிருந்தும் கூட உமது சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய 2021.03.29, 2021.03.31 மற்றும் 2021.04.19 ஆகிய தினங்களில் கௌரவ காணி அமைச்சரின் தலைமையில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய, எனது இலக்கம் 2/3/03/06 மற்றும்

2021.04.05 ஆம் திகதிக்குரிய கடிதம் மற்றும் 2021.04.27 ஆம் திகதிக்குரிய கடிதங்கள் மூலம் அக்கோரிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்வுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டன.

04. உமது சங்கத்தால் அத்தொழில்சார் நடவடிக்கைகளை தொடர்ந்தும் நடாத்திச் சென்ற காரணத்தால் மீண்டும் 2021.05.01 ஆம் திகதி இறுதியாக கௌரவ அமைச்சருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு வழங்கக் கூடிய தீர்வுகள் தொடர்பாக உமக்கு அறிவிக்கப்பட்டது. அதில் கலந்துரையாடப்பட்ட உமது சங்கத்தின் கோரிக்கைகளில்,

i. பிரத்தியேக நில அளவீடுகளில் ஈடுபடுவதற்காக வழங்கப்படுகின்ற வருடாந்த நில அளவீட்டு அனுமதிப்பத்திரம் தொடர்பாக நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ii. அரச நில அளவையாளர்களின் பதிவை வழங்குவது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

iii. மாதாந்த தங்குமிட கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பாக அமைச்சரவைக்கு மகஜர் ஒன்றை முன்வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

iv. நில அளவை அத்தியட்சகர்களின் போக்குவரத்து வசதிகள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் விதிமுறைகளுக்கு அமைய மைல் கூலிக் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

v. SRIMS தரவு முறைமை தொடர்பாக முன்வைக்கப்பட்ட சிக்கல்கள் தொடர்பாக திணைக்கள மட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதுடன், அதில் உரிய முறையில் அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக நில அளவையாளர் நாயகத்தினால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

vi. மடிக்கணினிக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பான கோரிக்கையானது நிறுவன பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

vii. பயிற்சிபெறும் நில அளவையாளர்களுக்காக தொலைபேசி கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கும் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

viii. நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அமைச்சரவையால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

05. 2021.05.01 ஆம் திகதி கௌரவ அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்பு மேற்குறிப்பிடப்பட்டுள்ள 08 விடயங்களுக்கும் அவசியமான தீர்வுகளை விரைவாக பெற்றுக் கொடுப்பதன் கீழ் 2021.05.03 ஆம் திகதி முதல் தொழில்சார் நடவடிக்கைகளை இடைநிறுத்தி கடமைகளில் ஈடுபடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உமது சங்கத்தால்

அறிவிக்கப்பட்டிருந்தாலும், இதுவரை உரிய முறையில் கடமையில் ஈடுபட்டு உங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதனை அவதானிக்கின்றேன்.

06. அவ்வாறே, உங்களால் 2021.06.13 திகதிக்குரிய கௌரவ அமைச்சர், நில அளவையாளர் நாயகம் மற்றும் எனக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கடிதத்தை கவனத்தில் கொள்ளும் போது அக்கடிதத்தில் அடங்கியுள்ள விடயங்களுக்கு அமைய,

- தொழிற் சங்க மட்டங்களைத் தாண்டி நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்துள்ளமை
- அரச சேவைகள் சுற்றறிக்கைக்கு அமைய மற்றும் சுபீட்சத்தின் நோக்கின் கீழ் நிறைவேற்ற வேண்டிய நில அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்குமாறு சங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தி உள்ளமை
- திணைக்களத் தலைவர்களை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்ட அமைச்சரவையின் நடைமுறைகளுக்கு சவாலை ஏற்படுத்துதல் போன்ற தொழிற்சங்கத்திற்கு பொருந்தாத விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவதானிக்கின்றேன்.

07. உம்மால் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு அமைய விளங்குவது யாதெனில், அரசின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான பங்களிப்புக்கள் வேண்டுமென்றே செய்யாமல் இருக்கப்படுகின்றன என்பதாகும். அதற்காக உமது சங்கத்தால் அரச நில அளவையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை உரிய முறையில் மேற்கொள்வதைத் தடுக்கும் விதமாக தொழிற் சங்கம் ஒன்றிற்கு மேற்கொள்ள முடியுமான செயற்பாடுகளை மீறி மேற்கொள்ளப்படுகின்ற விடயங்களை உடனடியாக நிறுத்துமாறு இத்தாள் அறிவிக்கின்றேன். ஆகையால், நிருவாகத்திற்குக் கட்டுப்பட்டு தமது கடமைகளை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்திக் கொள்கின்றேன்.

08. தொடர்ந்தும் இவ்விடயங்களை கருத்திற் கொள்ளாமல் கடமைகளைத் தவறும் பட்சத்தில் அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை மேலும் அறிவித்துக் கொள்வதுடன், அவ்வுறுப்பினர்களுக்கு பிரத்தியேக அளவீடுகளில் ஈடுபடுவதற்கு வழங்கப்பட்டுள்ள வருடாந்த அனுமதிப்பத்திரத்தையும் இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ அமைச்சர் அவர்களால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உமது சங்கமானது சாதகமான விதத்தில் பதிலளிக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

ஆர். ஏ. ஏ. கே. ரணவக்க,

செயலாளர்,

காணி அமைச்சு

பிரதி:- நில அளவையாளர் நாயகம், நில அளவைத் திணைக்களம் - சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவிப்பதற்காக.